and expressed their gratification at the assistance rendered to the small manufacturers. They did not make any recommendations. Information regarding their visit to other Industrial Establishments is not available.

*National Highways in Madurai district*

* 256 *Q*.—SRIMATHI A. S. PONNAMMAL (on behalf of SRI V. SANKARAN) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number and particulars of the narrow culverts proposed to be widened and the bridges to be constructed in the place of existing causeways in the Second Five-Year Plan under the National Highways in the Madurai district;

(*b*) the estimated cost of the same; and

(*c*) how far they have been implemented?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*c*) The attention of the Member is invited to the paper [a] placed on the table of the House.

**SRIMATHI A. S. PONNAMMAL :** தலைவர் அவர்களே, இதில் நிலக்கோட்டைத் தாலூகா, வத்தலக்குண்டு தாலூகா, ரங்க நாயக்கன்பாளையத்திலிருந்து ராமனாயக்கன் பாளையத்திற்கு பாலம் போடுவதற்கு கனம் அமைச்சர் அவர்களுக்கு ஏதாவது எஸ்டிமேட் வந்திருக்கிறதா? அப்படியானால் இதையும் சேர்த்துக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**THE HON. SRI P. KAKKAN:** இதற்கு ஒரு தனிக் கேள்வி போடவேண்டும்.

**MR. SPEAKER :** அங்கத்தினர்கள் உப கேள்விகள் கேட்கும் போது மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டதாகத்தான் கேட்க வேண்டும் என்று ஸ்ரீ கோதண்டராமன் அவர்களுக்கும், ஸ்ரீ மாணிக்கம் அவர்களுக்கும் முன்பே அவர்கள் இம்மாதிரி மூலக் கேள்விக்கு சம்பந்தப்படாத உப கேள்விகள் கேட்டபொழுது சொன்னேன். அப்பொழுது அம்மையார் அவர்கள் இல்லாததினால்தான், 'குறிப்பிட்ட ஒரு பாலத்தை ஏன் சேர்க்கக்கூடாது' என்று கேட்கிறார்கள். ஆதலால் ஒரு அங்கத்தினர் உப கேள்வி கேட்கும்போது மூலக் கேள்விக்குச் சம்பந்தப்படாததாக அவரவர் ஜில்லாவிலுள்ள வேலைகளை ஏன் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று கேட்டால், கனம் அமைச்சர் அவர்கள் எப்படி பதில் சொல்லுவார்கள்?

SRIMATHI A. S. PONNAMMAL : இந்த அறிக்கையில் கொடுக்கப் படவில்லை.

**MR. SPEAKER :** கனம் அங்கத்தினர் அவர்கள் இது பற்றி தனிக்கேள்வி போட்டால் தனிச்சலுகைகூட கொடுக்கப்படலாம்.

---

[a] Printed as Appendix II on page 83–84 infra.